**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 28–ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **மாணிக்கசெல்வம்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**28.07.2025 OS.No. 11/2022 வா.சா. 1 மாணிக்கசெல்வம் ஆஜர்**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் லாடனேந்தலில் குடியிருந்து வருகிறேன். (சாட்சி முதலில் திருப்புவனத்தில் குடியிருப்பதாக சொல்லிவிட்டு பின்னர் லாடனேந்தலில் குடியிருப்பதாக மாற்றி கூறினார் ). எனது சொந்த ஊர் கட்டிக்குளம் ஆகும். நான் எத்தனை ஆண்டுகளாக லாடனேந்தலில் குடியிருந்து வருகிறேன் என்றால் 9 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பாக நான் எங்கு குடியிருந்தேன் என்றால் திருப்புவனத்தில் குடியிருந்து வந்தேன். லாடனேந்தலில் சொந்தமாக வீடு கட்டி குடியிருந்து வருகிறேனா என்றால் லாடனேந்தலில் சொந்த வீட்டில் இருந்தோம் . தற்போது அங்கேயே வாடகை வீட்டில் இருந்து வருகிறோம். தாவா வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதையை புழங்க விடாமல் அடிக்கடி தொந்தரவு செய்து வருவதால் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் . எனது மகள் என்ன பணி செய்து வருகிறார் என்றால் கிராம நிர்வாக அலுவலராக இருந்து வருகிறார். தாவா சொத்து யார் மூலமாக நான் வாங்கினேன் என்றால் பிரதிவாதிகள் எங்களை மெக்கானிக் சுரேஷ் எனபரைது வந்து எங்களைஅடிக்கடி பார்த்து 1ம் பிரதிவாதியின் மகன் வெளிநாடு செல்ல வேண்டும் என்பதால் பிரதிவாதிகள் கேட்டதன் பேரில் என் மகனிடம் பேசி கிரையம் வாங்கினேன். என் மகன் நான் கிரையம் வாங்கிய சமயத்தில் எங்கே இருந்தார் என்றால் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார் . என் மகன் வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணம் மூலமும் நான் வைத்திருந்த நகைகளை விற்று கிடைத்த பணத்தின் மூலமம் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். எனது மகளின் கணவர் என்னவாக இருந்து வருகிறார் என்றால் வழக்கறிஞராக இருந்து வருகிறார். நான் மொத்தம் எத்தனை சென்ட் சொத்து வாங்கியுள்ளேன் என்றால் 25 சென்ட் வாங்கியுள்ளேன். நான் தாவா சொத்தை

கிரையம் வாங்கும்போது தாவா சொத்தின் அமைப்பு எவ்வாறு இருந்தது என்றால் தோப்பாக இருந்தது. தாவா சொத்திற்கு மேல்புறமும், வடபுறமும், கீழ்புறமும் 1ம் பிரதிவாதி சுகுணாவிற்கு சொத்து இருந்தது . தாவா சொத்து உட்பட மொத்த விஸ்தீரணம் 80 சென்ட் இருந்தது. அதில் தென்புறம் 25 சென்டை தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**(பிரதிவாதிகளின் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam